AUTHOR: No author available SECTION: NEWS PAGE: 3 PRINTED SIZE: 881.00cm² REGION: KL
MARKET: Malaysia PHOTO: Full Color ASR: MYR 5,767.00 ITEM ID: MY0048745386

30 JUN, 2022

Producing sustainable energy transition

Makkal Osai, Malaysia

நிலையான எரிசக்தி மாற்றத்தை உருவாக்குதல்

நிலையான எரிசக்தி மேம்பாட்டு வாரியம் (செடா-SEDA MALAYSIA) புதுப்பிக்கத்தக்க மலேசியா வின் எரிசக்தித் துறையை உருவாக்கி வேலை வாய்ப்புகளை அதிகரிக்கும் புதிய முதலீடுகளைக் கவர்வதை இலக்காகக் கொண்டிருக் கிறது.

2025ஆம் ஆண்டுக்குள் 19.93 மில்லியன் ரிங்கிட் முதலீடுகளைக் கவர்வதற்கும் 28,416 வேலை வாய்ப்பு களை உருவாக்குவதற்கும் இந்த அமைப்பு நோக்கம் கொண்டுள்ளது.

2011இல் தொடங்கிய காலத்திலிருந்து SEDA MALAYSIA எதிர்நோக்கியுள்ள பல்வேறு சவால்களைச் சமாளித்து நாட்டின் நிலையான எரிசக்தி மாற்றத்தை உருவாக்குவதில் வெற்றி பெற்றிருக்கிறது.

தொடக்கமாக இந்த அமைப்பானது FEED-in TARIFF (FiT) ஃபீட்-இன் தாரிஃப் எனும் புதிய செயல்திறன் அமலாக்கத்தை மேற்பார்வையிடும் பணியைப் பெற்றது.

இந்தப் புதிய செயல்முறையானது நிறுவனங்கள், தொழில்துறைகள், தனி நபர்கள் ஆகியோரின் நீண்ட கால முதலீட்டு வாய்ப்புகளாக இருப்பதை மாற்றம் பெறும் எரிசக்தியின் அறிமுகத்தை உறுதி செய்வதாக இருந்தது.

இந்த FiT நுட்பமானது, சான்றிதழ் பெற்ற Feed -in Approval Holders ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு பரிந்துரை செய்யப்பட்ட விகித கட்டணத்தில் தேசிய எரிசக்தி அமைப்பிடம் விற்பதற்கு அல்லது ஏற்றுமதி செய்வதற்கு அனுமதிக்கிறது.

இந்த நுட்பத்தின் கீழ் எரிசக்தி உற்பத்தியாளர்கள் தயாரிப்புக் கட்டணம், ஏற்றுமதி கட்டணம் ஆகியவற்றி லிருந்து பலன் பெறுவதற்கு வகை செய்கிறது.

நிலையான எரிசக்தி வளங்களானது FiT திட்டத்தின் கீழ் உயிர்வாயு, உயிரியல் தொகுதி, நீர் மின்னியல், சூரிய சக்தி ஆகியவற்றை உருவாக்கும் அமைப்பு முறையைக் கொண்டிருக்கிறது.

இதன் ஆக்கத் திறன், ஆக்கப்பூர்வம் உலக நாடுகளில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை அதிக அளவில் ஏற்றுக் கொள்ளும் தன்மையை FiT திட்டம் கொண்டிருக்கிறது.

கடந்த ஆண்டு டிசம்பர் வரை 596.71 மெகா வாட் FiT திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன.

FiT நுட்பம் அதன் பங்குதாரர்களிடம் குறிப்பாக சூரிய சக்தி தொழில் துறைகளிடமிருந்து பெரும் வரவேற் பைப் பெற்ற நிலையில் ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு NET Energy Metering (NEM) திட்டத்தை SEDA MALAYSIA அமல்படுத்தியுள்ளது.

2016 நவம்பர் மாதம் இத்திட்டம் தொடங்கியது. இது சூரியசக்தி மின்னமுத்தம் முறையிலிருந்து தயாரிக்கப் படும் மின்சாரத்தைப் பயன்படுத்துவதற்கு கட்டட உரிமையாளர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டது.

கூடுதலாகத் தயாரிக்கப்படும் மின்சாரத்தை ஏற்றுமதி செய்வதற்கும் விற்பனை செய்வதற்கும் உரிமையாளர் களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது. இதற்கு அவர்கள் தொனாகா நேஷனல் பெந்நூட், சபா எலெக்ட்ரிசிட்டி செண்டிரியன் பெந்நூட் ஆகியவற்றின் விநியோக லைசென்ஸ்களைப் பெற்றிருப்பது அவசியமாகும். எரிசக்தி ஆணையம் வகுத்திருக்கும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு செயல்படுவது அவசியமாகும்.

தங்களது இல்லங்கள், அலுவலகக் கட்டடங்கள், தொழிற் சாலைகள் ஆகியவற்றின் கூரைகளில் சூரிய ஒளி சக்தி மின்னமுத்தம் முறையைப் பொருத்துவதற்கு அனுமதி கேட்டு மலேசியர்கள் விண்ணப்பிக்கலாம். இருப்பினும், இதனால் உற்பத்தி செய்யப்படும் கூடுதல் மின்சாரத்திற்கு அவர்கள் ரொக்க சலுகைகளைப் பெற முடியாது. மாறாக, குறைந்த மின்சாரக் கட்டண பில்களை அவர்கள் பெறு வர். தொழில்துறையைச் சேர்ந்தவர் கள் மட்டுமே கூடுதல் மின்சார உற்பத்திக்கு ரொக்க சலுகைகளைப் பெறுவர்.

NET Energy Metering (NEM) திட்டமானது எரிசக்தி மேலும் செலவுகளைச் சேமிக்கும் ஆக்கப் பூர்வமான ஒரு திட்டமாக விளங்கு கிறது. நீர் மின்சாரத் தொழில் லிருந்து உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை வாங்குவதையும் இது குறைக்கிறது.

ஜனவரி 1, 2019 ஆம் தேதி NEM 2.0 அறிமுகம் செய்யப்பட் டது. இத்திட்டத்தின் கீழ் கூடுத லாக உற்பத்தி செய்யப்படும் சூரிய ஒளி மின்சாரத்தை ஒன்றுக்கு ஒன்று அடிப்படையில் பயன்படுத்து வதற்கு அரசங்கம் ஒப்புக் கொண் டது. இதன் மூலம் தேவையற்ற செலவுகள் தவிர்க்கப்பட்டன. இந்த மேம்படுத்தப்பட்ட திட்ட மானது தொழில் துறையைச் சார்ந்தவர்களிடமிருந்து அபரிமித மான ஆதரவைப் பெற்றது.

NEM 2.0 கீழ் 2019 மொத்த புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அளவுக்கு அனுமதி வழங்கப்பட்டது. இது 2016இலிருந்து 2018 வரை அங்கீகரிக்கப்பட்ட மொத்த அளவில் நான்கு மடங்கு அதிகமாகும்.

டிசம்பர், 29, 2020ஆம் தேதி NEM 3.0 பிரிவுகளுடன் அறிமுகப் படுத்தப்பட்டது. NEM Rakyat, NEM GoMEn, NOVA ஆகியவையே அந்த மூன்று பிரிவுகளாகும். இவை 294.28 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் வல்லமையைக் கொண்டது. இந்த அளவுக்கு கடந்த ஆண்டு டிசம்பரில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

FiT, NEM ஆகிய திட்டங்களை அமல்படுத்தியதோடு SEDA MALAYSIA 2 அரசங்க அதிகாரம் பெற்ற எரிசக்தி திறன் திட்டங்களையும் அறிமுகம் செய்தது.

இதனிடையே, இந்நிறுவனத்தின் 2ஆவது திட்டமான the Sustainability Achieved via Energy Efficiency (SAVE)- கீழ் எரிசக்தியை ஆக்கப்பூர்வமாகப் பயன்படுத் தும் வீட்டு மேலும் வர்த்தக இடங்களில் மின்சார சேமிப்புப் பொருட்களை பயன்படுத்துவதற்கும் விற்பதற்கும் ஊக்குவிக்கும் நோக்கத்தைக் கொண்டிருக் கிறது. 2011 ஜூலை மாதம் இத்திட்டம் தொடங்கப்பட் டது. எரிசக்தி சாதனங்களை வாங்குவதற்கு பொதுமக்க ளுக்கும் தனியார் துறையினருக்கும் கழிவுகளை வழங்குவதற்கும் இத்திட்டம் வகை செய்கிறது.

SAVE திட்டத்தின் கீழ் ஐந்து நட்சத்திர எரிசக்தி சேமிப்பு வகையிலான குளிர்சாதன பெட்டிகள், குளிரூட்டிகள் வாங்குவோருக்கு முதலில் வருவோருக்கு முதல் சலுகை என்ற அடிப்படையில் கழிவு வவுச்சர்கள் வழங்கப்படும். தனியார் துறையினர் தங்களது இடங்களிலுள்ள நடப்பு மின்சாரப் பொருட்களை மாற்றிவிட்டு எரிசக்தி சேமிப்புத் தரத்தைக் கொண்ட புதிய மின்சார குளிர்சாதனங்களைப் பொருத்தினால் கழிவு வவுச்சர்கள் வழங்கப்படும்.

SAVE 2.0 என்ற இரண்டாவது திட்டமானது நான்கு மேலும் ஐந்து நட்சத்திர எரிசக்தி சேமிப்பு மின்சார சாதனங்களைக் குறிப்பாக குளிர்சாதன பெட்டிகள், குளிரூட்டிகள் வாங்கும் மலேசியர்களுக்கு 200 ரிங்கிட் கழிவு வழங்கப்படும்.

கோவிட்-19 தொற்றுப் பரவல் காலத்தில் SEDA MALAYSIA ஆன்லைன் விற்பனையில் அதிகக் கவனம் செலுத்தியது. இந்த மின்னியல் வர்த்தகத்தில் ஷோப்பி, லாஸடா, பிஜி மேல் ஆகிய நிறுவனங்களு டன் அது கைகொடுத்தது. சரியான நேரத்தில் அந்தத் திட்டத்தை முன்னெடுத்த SEDA MALAYSIA சிறு, நடுத்தர, மேலும் சில்லறை வியாபாரங்கள் ஆகியவற் றில் அமோக விற்பனையைப் பதிவு செய்தது.

SAVE 2.0 கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் வரை மின்சார பில்லில் 21.8 மில்லியன் ரிங்கிட்டை சேமித்திருக்கிறது. இது ஒவ்வோர் ஆண்டும் 38.3 கிலோ டன் எடைக்குச் சமமானதாகும்.

இவ்வாண்டு SAVE 3.0 அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் குளிர்சாதன பெட்டி, குளிரூட்டி, சலவை இயந்திரம், மைக்ரோவேவ், ஏர்ஸ் குக்கர், தொலைக்காட்சி போன்றவை சேர்க்கப்பட்டன.



Provided for client's internal research purposes only. May not be further copied, distributed, sold or published in any form without the prior consent of the copyright owner.